REGISTERED No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ பிப்ரவரி மீ	இதழ் ௨.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
வெளியூரார்க்கு ரூ 1¼	தனிப் பத்திரிகை அணா 2

உள்ளுறை.

பக்கம்.

பெண்கள் படிப்பு:— பத்திராதிபர். 25

மருத்துவப் பெட்டி:— ஓர் மருத்துவன் 29

அறிவு:— ஸ்ரீ T. பொன்னுசாமி முதலியார், கிண்டி, சைதாப்பேட்டை, சென்னை. 30

சற்புத்திரன் சஞ்சலம்:— ஸ்ரீ சு. அ. சுப்பராயப்பிள்ளை. ... 33

தொண்டைமண்டல சதகம்:— ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியார், கோயமுத்தூர். 38

ஐயங்கார்குளம் சைவசித்தாந்தபுராணப் பிரசங்க சபையின் முதல் வருடோற்சவம்:—சைவ சமயாபிமானி. ... 42

ஓர் சந்தேக வினா:— உண்மை விரும்பி. 44

ஓர் வேண்டுகோள்:— வித்தை விரும்பி. 45

பாகூர் ஸ்ரீ கோபாலவாசகசாலையின் மூன்றாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம்:— ஸ்ரீ A. V. நாராயண செட்டியார், ஆதிங்கப்பட்டு. 45

நியாயமாலா:— இதோபதேசி. 47

புத்தகநன்கொடை:— ஸ்ரீ தி. திருப்புளிசாமி ஐயர், கலைமகள் கழகத்தின் காரியதரிசி, புதுவை.... 48

விளம்பரம்.

ரமணி.

ஓர் காதற்கதை.

விலை அணா 10.

மிகச் சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன.

எனது வாசம் புதுச்சேரியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஆகையால் இனி நேயர்கள் எனக்கெழுதும் கடிதங்கள் முதலியவைகளை "9, காமாட்சியம்மன் கோயில் வீதி, புதுச்சேரி" என்ற விலாசத்திற்கு அனுப்பாமல் அடியில் காணும் விலாசத்திற்கே செலுத்துவார்களாக.

சு. அ. சுப்பராயப்பிள்ளை,
112, அய்யலு நாய்க்கர் தெரு,
தூத்துக்குடி.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௫. | 1917-ம் ஆ௵ பிப்ரவரி மீ | இதழ் ௨.

பெண்கள் படிப்பு.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பென்னத்திற்கு? என்ற இடைக்காலத்தே யேற்பட்ட குருட்டுக் கொள்கை இப்போது பெரிதும் போய்விட்டதென்றே சொல்லவேண்டும். அக் கொள்கையுடையார் இப்போதும் சிலர் இருப்பாரானால் அவர்கள் வெறும் வயது முதிர்ந்த கிழங்களாகத்தான் இருத்தல் வேண்டும். அவர்களுக்குப் பின் அக் குறையும் நீங்கிவிடும். இப்போது எங்குப் பார்த்தாலும் பள்ளிக்கூடங்களிலும், கலாசாலை (College)களிலும் பெண்கள் படித்துக்கொண்டு வருகிறார்கள். வேண்டுமானால் அப் படிப்பு தக்கபடி வளர்ச்சி பெறவில்லையென்று சொல்லலாமேதவிர, பெண்கள் கல்வி கற்பதில்லையென்று சொல்ல இப்போது முடியாது. அக்காலம் போயேவிட்டது. பலவிடங்களில் பல பெண்மணிகள் சங்கங்கள் ஏற்படுத்துவதும், மேடைமீதேறிப் பிரசங்கம் செய்வதுமே அதற்குச் சான்றாகும். ஆதலின், பெண்கள் படிக்க

வேண்டுமென்று நாம் இப்போது அதிகம் சொல்லவேண்டிய தில்லை. யாம் அது சொல்லவும் வரவில்லை.

இப்போதைய பள்ளிக்கூடத்துப் பெண்கள் படிப்பு அவர்களுக்குப் பெரிதும் பயன்தரக் கூடியதா? எப்படிப்பட்ட கல்வி அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்? என்பனவே இப்போது யாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பொருளாகும். இவற்றை ஆராய்வதன் முன்னர், பெண்மக்களுக்கும் ஆண்மக்களுக்கும் உள்ள வேற்றுமையைச் சிறிது விளக்கிக்கொள்வது நலம். உடம்பின் அமைப்பைப்பற்றியும் தன்மைகளைப்பற்றியும் பார்க்கும்போது, பெண்மக்களுக்கும் ஆண்மக்களுக்கும் நிரம்ப வேற்றுமை காணப்படுகின்றது. பெண்மக்களது உடம்பு இயற்கையில் மென்மைத்தன்மையுடையது. அதுபற்றியே அபலை என்று வடநூலாரும், மெல்லியல் என்று தமிழ் வல்லாரும் பெண்மக்களுக்குப் பெயரிட்டிருக்கின்றனர். அன்றியும், "இனம்போன்றினமல்லார் கேண்மை மகளிர் மனம்போல வேறுபடும்" என்ற திருக்குறளில் ஆசிரியர், இனம்போன்று இனமல்லாரது கேண்மை வேறுபடுதற்கு, மகளிர் மனத்தை உவமையாகக் கூறினரேயன்றி மைந்தர் மனத்தைக் கூறினரில்லை யாதலின், பெண்கள் மனமும் வன்மை குறைந்ததென்றே தெரிகிறது. ஆண்மக்களுக்கோ உடம்பு இயற்கையில் வன்மைத்தன்மையுடையது. மனமும் அப்படியே. வல்லமையில், யானையையும் சிங்கத்தையும் ஆண்மக்களுக்கு ஒப்பிடுவதேயன்றி, பெண்மக்களுக்கு ஒப்பிடுவதில்லை. அன்றியும், அஞ்சாமை முதலிய தன்மைகள் ஆண்மக்களது இலக்கணமாகச் சொல்லப்படுகின்றன. நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு இவையே பெண்கள் தன்மையென்பர். இருதிறத்தாரிடத்தும் அவைகள் கண்கூடாகக் காணப்படுகின்றன. அவயவ வேற்றுமையைக்கொண்டும் பெண்மக்கள் படைப்பு வேறு, ஆண்மக்கள் படைப்பு வேறு என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால்மேற்கூறிய தன்மைகளுள் சில, சிலவிடத்து மாறுபட்டும் காணக்கிடக்கும். செயற்கையினாலோ மற்றெதனாலோ அப்படிக் காணக்கிடக்குமாயினும் அது ஒரோவிடத்து நிகழ்வதாதலின், அதனையே பொது விதியாகக்

கொள்ளுதல் அறிவுடைமையாகாது. ஆதலின், பெண்மக்களின் இயற்கை வேறு, ஆண்மக்களின் இயற்கை வேறு என்பதில் ஐயம் சிறிதுமில்லை.

ஆகவே, ஆண்மக்களுக்கும் பெண்மக்களுக்கும் ஒரேவித மான படிப்பு எப்படி அதிக நன்மையைத் தரும்? இப்போது பள்ளிக்கூடங்களில் பெரிதும் ஆண்மக்கட்குப் பயன்படக்கூடிய கல்வியே கற்பிக்கப்படுகிறது. அதனைத்தான் நமது பெண்களும் படிக்கின்றார்கள். ஆண்மக்களுக்குரிய படிப்பு பெண்மக்களுக்குப் பெரிதும் பயன்தராது. தேச சரித்திரமும் பூமி சாத்திரமும் கற்பதால் பெண்கள் அடையும் நன்மை எவ்வளவு? யானையைப் பற்றியும் சிங்கத்தைப்பற்றியும் புலியைப்பற்றியும் புகையிலை முதலியவற்றைப்பற்றியும் தெரிந்துகொள்வதால் பெண்கள் பெறும் பயனென்ன? பொதுவில் இவையெல்லாம் ஒருவாறு அறிவு வளர்ச்சிக்கு இடமாயினும், சிறப்பு வகையாகப் பெண் களுக்கு அத்துணை நன்மை பயப்பதில்லை. அறிவு வளர்ச்சியும் தங்கள் வாழ்க்கைக்கு உரியதாகவன்றோ இருத்தல்வேண்டும்?

பெண்களுக்குரிய பாடங்களனைத்தும், பலவிதத்தும் அவர் களுக்குப் பயன்படத்தக்கதாகவே அமைதல்வேண்டும். உணவு அமைத்தல் அவர்கட்கு உரிய செயலாதலின், சமையல் இப்படிச் செய்தல்வேண்டும்? காய்கறிகள் இப்படிச் சமைத்தல் வேண்டும்? பலகார வகைகள் இப்படிப் பண்ணல்வேண்டும்? இன்னின்ன பொருள்கள் இன்னின்ன அளவாக அவற்றிற்குச் சேர்த்தல் வேண்டும்? என்பதை அவர்கள் கல்வி வாயிலாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லறம் அவர்களாலேயே இனிது நடைபெறவேண்டி யிருத்தலின், இல்வாழ்க்கையை இப்படி நடத்தல்வேண்டும்? கண வனை உண்டி முதலியவற்றால் இவ்விதம் பாதுகாத்தல் வேண்டும்? மாமனார் மாமியார் முதலியவரிடத்து இப்படி நடந்துகொள்ளல் வேண்டும்? குழந்தைகளை இப்படி வளர்த்தல்வேண்டும்? என்பது முதலியவற்றையும் அக் கல்வி அவர்களுக்குத் தெரிவிக்கவேண் டும். சுகாதாரத்தைப் பெண்கள் பெரிதும் தெரிந்துகொள்ள வேண்டும். தையல், இசைப்பாட்டு முதலியவற்றையும் பயில

வேண்டும். இப்போது பள்ளிக்கூடங்களில் தையல் முதலிய சில பாடங்களைத் தவிர, மேற்கூறியவைகள் பெரும்பான்மையும் பெண்களுக்குக் கற்பிக்கப்படுவதில்லை. அவற்றிற்குரிய புத்தகங்களுமில்லை. பெரும்பான்மையும் ஆண்மக்கட்குரிய புத்தகங்களையே படிக்கின்றார்கள்.

இத்தகைய படிப்பால் பெண்கல்வி முற்றுப்பெறுவதெப்படி? இக் கல்வியால் அவர்கள் பெறவேண்டிய அறிவை முற்றும் பெறமுடியாது. ஆதலின், பெண்களுக்கென்று வேறு புத்தகங்கள் ஏற்படவேண்டும். அப் புத்தகங்களைப் படித்துப் பெண்கள் பயன்பெறவேண்டும். அங்ஙனம் கற்றுத் தேர்ந்த பெண்மணிகளே ஆசிரியாராக அமர்ந்து பெண்களுக்குக் கல்வி பயிற்றல்வேண்டும். தம் பெண்களைப் பூப்பெய்தும் வரையில் படிக்கவிட்டு, பின்னர்ப் படிப்பை நிறுத்திவிடும் தப்பெண்ணத்தைத் தாய்தந்தையர்களும் ஒழித்தல்வேண்டும். எவ்விதத்திலும் அவர்களை நிரம்பிய கல்வியுடையவர்களாகச் செய்தல் வேண்டும். அப்போழ்துதான் பெண்கள் அறிவு நிரம்பப்பெற்று அடைதற்குரிய பயனை யடையமுடியும்.

இவ்வாறன்றி, பெண்களை ஆண்மக்கட்குரிய கல்வியில் முதிர்ச்சிபெறச் செய்தால் அது அவர்கட்குப் பெரிதும் நன்மை பயக்காதென்பது மேற்கூறியவாற்றால் நன்கு விளங்கும். அன்றியும் சில சமயங்களில் அது தீமை விளைதற்கும் இடமாகும். இங்கிலாந்தில் பெண் சுதந்தரவாதிகள் என்ற சில பெண்பாலார், ஆண்மக்களுக்குப்போலத் தங்கட்கும் வாக்குச்சுதந்தரம் வேண்டுமென்று அரசுக்கடங்காமல் மந்திரி முதலியவர்கள் வீட்டுச் சாளரங்களைத் தகர்த்தும், கண்ணாடிகளை யுடைத்தும், பொதுக் கட்டடங்களைத் தீக்கிரையாக்கியும், தண்டனையையும் பொருட்படுத்தாமல் செய்துவந்த தீச்செயல்கள், இடையிலேற்பட்ட பெரும் போரினாலன்றோ மறைந்துள்ளன! அமெரிக்காவில் அதிகமாகப் படித்த சில பெண்கள், மற்றவர்க்குத் தாங்கள் அடங்கியிருக்க மனமின்றி, தங்கட்கு அடங்கி நடக்கவும், தங்கள் வேலையைச் செய்யவும், கல்லாத மூடர்களைத் தங்கட்குக் கணவர்களாகத்தேடு

கின்றார்கள் என்று எழுதியிருந்ததை முன்னம் ஓர் பத்திரிகையில் யாம் பார்த்ததுண்டு. என்னே! படிப்பினழகு! இத் தலைதடுமாற்றத்திற்கெல்லாம் காரணம், பெண்கள் தங்கட்குரிய கல்வியைப் பெறாமல், ஆண்மக்கட்குரிய கல்வியை அதிகமாகப் படித்தமையே என்று யாம் சொல்வோமானால், பெண்மணிகள் யாரேனும் எம் மீது போர்க்கெழுவார்களோ! மனத்தில் நன்மையென்று தோன்றுவது எதுவாயினும் அதனை மறைக்காமல் வெளிப்படுத்துவதே நமது கடமையாகும்.

பத்திராதிபன்.

மருத்துவப் பெட்டி.

நோயணுகாவிதி.

(தேரையர்.)

வெண்பா.

திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமல்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல் — உண்ணுங்கால்
நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

இ-ள். மலசலத்தை யடக்காமலும், விந்துவை அதிகமாக விடாமலும், உணவருந்தும்போது நீரைக் காய்ச்சியும் மோரை விளாவியும் நெய்யை உருக்கியும் உண்பவர்களுடைய பெயரைச் சொன்னாலும் பிணிகள் விலகிப்போம்.

விருத்தம்.

பாலுண்போ மெண்ணெய்பெறின் வெந்நீரிற் குளிப்போம்
பகற்புணரோம் பகற்றுயிலோம் பயோதரமு மூத்த
ஏலஞ்சேர் குழலியரோ டிளவெயிலும் விரும்போம்
இரண்டடக்கோ மொன்றைவிடோ மிடதுகையிற் படுப்போம்
மூலஞ்சேர் கறிநுகரோ மூத்ததயி ருண்போம்
முதனாளிற் சமைத்தகறி யமுதெனினு மருந்தோம்
ஞாலந்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

இ-ள். பசுவின்பாலையுண்போம். எண்ணெயிட்டுக்கொள்ளின் வெந்நீரில் குளிப்போம். பகற்காலத்தில் புணர்ச்சியும் நித்திரையும்

செய்யோம். எமக்கு வயதில் முதிர்ந்த மாதரையும் இளவெயிலையும் விரும்போம். மலசலங்களை அடக்கோம். சுக்கிலத்தை மிகுதியாக விடோம். இடதுகை கீழாகப்படுப்போம். மூலநோயை யுண்டாக்கும் கறிகளை யருந்தோம். புளித்ததயிரை யுண்போம். முதல்நாளில் சமைத்த கறி அமிர்தத்துக்கொப்பானாலும் புசியோம். பசித்தாலல்லது சாப்பிடோம். ஆதலின் நோயை முன்னிட்டுவரும் யமனுக்கு நம்மிடத்தில் என்னவேலை யிருக்கிறது ஒன்றுமில்லையென்க.

உண்பதிரு பொழுதொழிய மூன்றுபொழு துண்ணோம்
உறங்குவதி ராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்
மண்பரவு கிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்
வாழையிளம் பிஞ்சொழியக் கனியருந்தல் செய்யோம்
பெண்கடமை திங்களுக்கோர் காலன்றி மருவோம்
பெருந்தாக மெடுத்திடினும் பெயர்த்துநீ ரருந்தோம்
கண்புபெற வுண்டபின்பு குறுநடையுங் கொள்வோம்
நமனார்க்கிங் கேதுகவை நாமிருக்கு மிடத்தே.

இ—ள். தினமொன்றுக்கு இரண்டுதரமல்லது மூன்றுதரம் உண்ணோம். புசித்தவுடன் உட்கார்ந்துறங்குதல் நன்மையென்று ஜயின நூலிற் சொல்லியிருப்பினும் அதையும் பகலிற் செய்யோம். கருணைக் கிழங்கன்றி மற்றைக் கிழங்குகளைத் தின்னோம். வாழையின் இளங்காயையேயல்லது பழத்தைத் தின்னோம். மாதரை மாதத்திற் கோர்தரமே சேர்வோம். மிக்க தாக முண்டாயினும் போஜனமுடிவிலன்றிப் பின்பு நீரருந்தோம். புசித்த பின்பு குறுநடையாக நடப்போம். ஆதலின் நோயை முன்னிட்டுவரும் யமனுக்கு நம்மிடத்தில் என்னவேலை யிருக்கிறது ஒன்றுமில்லையென்க.

ஓர் மருத்துவன்.

அறிவு.

உலகில் நிறைந்துள்ள பொருள்களையும், அப் பொருள்களின் வடிவையும் கண்ணாலும், அப் பொருட் குணங்களை மற்றைய இந்திரியங்களாலும் நுணுகி ஒருகி ஆராய்வதால் அறிவுண்டாகிறது. ஓர் ஆசிரியன் ஓர் மாணாக்கனுக்கு, களிறென்பது யானையென்று கற்பித்தால், யானை யாவது என் என்பானாயின், அவ் யானையை அறியாதவனாகின்றான். அவனுக்கு யானையின் உருவத்தை எழுதிக் கற்பித்தால் ஒருவாறு யானை யின்னதென்பதை அறிந்துகொள்கின்றனன். இதனினும் யானையையே

கொண்டுவந்து அவனுக்கு நேரிற் காட்டிவிடின் அவன், யானை யிப்படிப் பட்டதென்பதை நன்றாக அறிந்துகொள்கின்றான். இனி அவனை, யானையாவதென்னெனின், அவன், யானையைப்பற்றி நன்றாக விளக்கிச் சொல்ல வல்லவனாவன்.

ஒரு பொருளைச் சொல்வதிலும் எழுதிக் காட்டுவதிலும் கண்ணுக்குக் காட்டிவிடின், அதனாலுண்டாகிற அறிவு பெரிதாகின்றது; ஊக்கந் தருகின்றது; மகிழ்வு பெருக்குகின்றது. சிறுவர் முதலோர்க்கும் ஒரு பொருளைக் கண்ணால் காண்பதனால், முதல் உண்டாவது மகிழ்ச்சியே. கண்ணையுடைய மற்றைய உயிர்களுக்கும் இம் மகிழ்ச்சி உண்டாகாமல் இல்லை.

நூல்களால் எடுத்துக் கூறும் தரும சின்னங்கள் நான்கனுள் இம் மகிழ்ச்சியும் ஒன்றே. அவற்றுள் சிறந்ததும் இதுவே. உயிர்கள் தாழ்ந்த நிலையிலும் உயர்ந்த நிலையிலும் அடையவேண்டிய பயன், இம் மகிழ்வினும் வேறொன்றில்லை. உயிர்கள் உயர்ந்த நிலையில் அடைகின்ற மகிழ்வை மோட்சமென்பர்.

இம் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருப்பது கண்ணே. கண்ணில்லாதவன் எவ்வளவு செல்வனாயினும், எவ்வளவு கல்வியுடையனாயினும், எவ்வளவு வலியனாயினும் பெருமையடையான். எல்லா இந்திரியங்களிலும் கண்ணே சிறந்தது. உடலிற் சிறந்த முகத்தில் கண் முன்னிருப்பதே சான்றாகின்றது. கண் மூடினால் மற்றைய இந்திரியங்களின் செயல் ஒடுங்குகின்றன. படைப்பிற் சிறந்த சூரியனே ஒரு பொருளைக் கண்ணால் காண்பதற்கு உதவியாகின்றது. சூரியனில்லையேல் ஒன்றையும் கண்ணால் காணுதல் கூடாது. உலகும் பாழ்படும். இதனால் பொருட்காட்சி, சூரியனால் உண்டாகிறதெனவும், அப் பொருட்காட்சியால் அறிவு பெருகுகின்றதெனவும் கொள்ளவேண்டும்.

இதுவே பிரத்தியட்சப் பிரமாணம்; இதுவே புலவர்க்கும் வலிவு தருவது; அனுமான முதலியனவெல்லாம் இதிலிருந்தே யுண்டாகின்றன. இப் பிரத்தியட்சப் பிரமாணத்தில் முதிர்ச்சிபெற்றவனே நுண்ணறிவுடையனாவன்.

"நுண்ணறி வின்மை வறுமை அஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்."

(நாலடியார் – அறியாமை – அதிகாரம்.)

என்றபடி இந் நுண்ணறிவுடைமையே பெருஞ்செல்வமாகின்றது.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர்." (திருக்குறள்.)

என்பதும் அக் கருத்து.

காட்சியென்பது முதல் பார்வையையும், பிறகு அறிவையும் உணர்த்தி நிற்கும். "நடுக்கற்ற காட்சியவர்."

பெருஞ்செல்வமாகிய இந் நுண்ணறிவுடையானே,

க. பல எந்திரங்களைச்செய்வன்.
உ. நல்ல வைத்தியம் நாடுவன்.
ந. அழகிய சித்திரங்களெழுதுவன்.
ச. அரிய சாமுத்திரிகம் கூறுவன்.
ரு. நுணுகிய சோதிடம் வல்லான்.
சு. நெடிதுகாலம் வாழ்வன்.
எ. சரீர தத்துவங்களை நன்கறிவன்.
அ. பயிர்த்தொழிலிற் சிறந்தவனுவன்.
கூ. கைத்தொழிலில் மேம்பாடு அடைவன்.
க0. கீதம் இனி திசைப்பன்.
கக. எளிதே சமய ஞானம் அடைவன்.
கஉ. திரிபதார்த்த சித்தியும் விரைவில் அடைவன்.

மற்றும் இவ் வறிவாலுண்டாகிற பயன் அளவில்லன. இவை யெல்லாம் சூரியனாலுண்டாகின்றமையின், அவனே வித்தியாதிபதியா கின்றனன். இச் சூரியனால் தான் முதல் முதல் தமிழுண்டாயது. உலகில் சூரியன் இரண்டுள்ளன.

"மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

இதனால் புறவிருளை யொழிக்கும் சூரியன் ஒன்றென்பதும், அகவிருளை யொழிக்கும் சூரியனொன்றென்பதும், அது தமிழென்பதும் தெளிந்துகொள்ளவேண்டும். தமிழென்பதற்கும் சூரியனாலுண்டாய தென்பதே பொருள்.

ஓர் வித்திலிருந் துண்டாகிய முளையானது, பல வடிவங்களாகத் திரிந்து மலர்ந்து அம் மா முதலியவற்றை அலங்கரிப்பதுபோல் சூரியனி லிருந் துண்டாகிற இயற்கைப்பொருளோசையானது, அனுசுத சம்பந்தத்தோடு பல பல சொற்களாய்த் திரிந்து வளர்ந்து தமிழையும், அந்நாடு முதலியவற்றையும் அலங்கரிக்கின்றது. தமிழ் இத்துணைச் சிறந்திருக்கின்றமையின், தமிழ் ஆரியமென்னும் இரண்டுமே சிறந்தன என்பது பெரியார் தம் துணிபு. உலகிலுள்ள மற்றெல்லாப் பாஷையும் இவ் விரண்டினின்றே யுண்டாயின.

இவையெல்லாம் இப்பொழுது அச்சிட்டிருக்கிற மொழிநூலால் நன்கு விளக்கமாகும்: தமிழ் மிகப் பழமையானதென்பதும், தமிழ்ச் சொற்களெல்லாம் காரணம்பற்றிவந்தன என்பதும், கிரீக்கு, லத்தீன் முதலியவற்றிலும் தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன என்பதும் பிறவும் அம்மொழிநூலில் கூறப்பட்டுள்ளன. அது பாயிரவியல், இலக்கணவியல், முதனிலையியல் என மூன்று இயல்களையுடையது. ௩௫0 பக்கம் கொண்டது; உயர்ந்த கடிதம்; உயர்ந்த கோலிகக்கட்டு; வசனநடை.

கல்விமான்களுக்கு ஆவசியகமானது. விலை ரூபாய் 2—0—0.

கையொப்பக்காரர்களுக்கு ரூ. 1—8—0 வீதம் கொடுக்கப்படும்.

T. பொன்னுசாமி முதலியார்,
கிண்டி,
சைதாப்பேட்டை, சென்னை.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(வெண்டாமரை ஒ, இதழ் ௧, 3-ம் பக்கத் தொடர்ச்சி.)

சாவித்திரி, காணாமற்போன சாவித்திரி, யௌவன சாவித்திரி, சௌந்தரிய சாவித்திரி, பேதைச் சாவித்திரி, என் சாவித்திரி, ஒரு குழந்தையைப்போல் வீறிட்டழுது என் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். அவள் முகம் என் மார்பின்மீது அமர்ந்திருந்தது. அவள் கண்ணீர் என் சட்டையிற் படிந்தது. இப்படி என்மீது சார்ந்த பெண்ணை நான் என் வலக்கையால் தழுவித் தாங்கினேன். அந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வாறு அவளைத் தேற்றி உபசரியாதிருக்க என்னால் முடியவில்லை. என் இருதயமோ சரீரத்திலிருந்து இற்று வீழ்ந்துவிடுவதுபோலத் துடித்தது. இந்தக் கோலத்திலிருந்தோம் நாகபுரத்து வீதிநடுவில். இது சிலருக்கு சம்பத்தகாததாகவும், சிலருக்குப் பரிகாசகரமாகவுமிருக்கலாம். ஆனால் சாவித்திரி கபடற்ற பெண். பருவமடைகிறவரையில் என் மடிமீதமர்ந்து பேசியிருந்தவள். எப்பொழுதும் என்னோடு கலகலவென்றே பேசுவாள். நானும் அவளோடு அவ்வாறு பழகிவிட்டேன். அத்தகைய சாவித்திரி பலபல அல்லல்களுற்றுப் பின்பு திடீரென என்னை நாகபுரத்து வீதியிற் கண்டாள். ஆகையால் தன்னை மறந்து அலறி என்

கழுத்தைக் கட்டிக்கொண்டாள். நானும் என்னை மறந்து அவளை என் வலக்கையால் அணைத்தேன். ஆனால் ஒரே கணந்தான் இந்த நிலைமை. பின்னர், சட்டெனச் சாவித்திரி என் கழுத்தினின்று தன் கரங்களை நீக்கிச் சற்று விலகி நின்றாள். அவள் கூடவந்த பெண்ணை நோக்கினாள். "தெரேஸம்மா! நீங்கள் வீட்டுக்குப் போங்கள், நான் அப்புறம் வருகிறேன்" என்றாள். அந்த அம்மாள் முதலில் சற்று மயங்கின போதிலும், அப்பால் சரசரவென நடந்து அகன்றுபோயினாள்.

சாவித்திரியும் நானும் ஒருவரையொருவர் உற்று நோக்கினோம். யார் முதலிற் பேசுவது, இன்னது பேசுவது என்று தெரியாமல் மௌன மயக்கங்கொண்டிருந்தோம். ஆனால், பின்பு சாவித்திரியே தொடங்கலாயினள் :—

"இந்த இடத்தில் இந்த விதமாக, அதாவது இவ்வளவு லஜ்ஜை கெட்ட விதமாக, என் ஆத்திரத்தில், நான் — நான் — நான் — நான் —"

அவ்வளவுதான். அதற்குமேல் அவளால் பேசக்கூடவில்லை. "சரி தான் சாவித்திரி! இந்த உபசாரப் பேச்செல்லாம் வேண்டா. வா; வீட்டுக்குப் போகலாம்" என்று நான் என்னவோ குழறிவிட்டு நடந்தேன். அவளும் என்னைத் தொடர்ந்தாள். எனது ஜாகையாகிய ஒரு சிறிய வீட்டை யடைந்தோம்.

நான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன். அருகேயிருந்த மற்றொரு நாற்காலியைக் காட்டி "இதில் உட்கார்" என்றேன். அவள் நின்று கொண்டே யிருந்தாள். சற்றுநேரம் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டே யிருந்தோம். என்ன பேசுவதென்று இப்பொழுதும் எனக்குத் தெரியவில்லை. இப்பொழுதும் அவளே ஒருவாறு சம்பாஷணையைத் தொடங்கினாள். "இதோ, உங்கள் மோதிரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டே தன் இடக்கையால் தன் வலக்கை விரலிலிருந்த ஒரு மோதிரத்தைக் கழற்றலாயினள். நான் திடுக்கிட்டேன். ஏனென்றால், ந. ஜ — என்ற எழுத்துக்கள் செதுக்கப்பெற்ற எனது காணமற்போன மோதிரம் அவள் விரலில் இருந்தது. மற்றொரு விரலில் மற்றொரு மோதிரமும் இருந்தது. ஆனால் அதை நான் கவனிக்கவில்லை.

"இதோ, உங்கள் மோதிரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறிக்கொண்டே மோதிரத்தைக் கழற்றி எனக்குக் கொடுக்கலாயினள் அந்த இளம்பெண். நானும் அதை வாங்கி என் கைவிரலில் அணிந்து கொண்டேன். அப்பொழுதுதான் நானும் அறிந்தேன். அவளும்

அறிந்தாள். என்ன அறிந்தோம்! அவள் கொடுக்க, நான் பெற்று என் விரலில் அணிந்தது என் மோதிரமல்ல, சாவித்திரியின் சொந்தக் கணையாழி. அவள் கைவிரலில் இன்னும் இருந்தது என்னுடைய சொந்த ந. ஜ – கணையாழி.

அவள் எனக்குக் கொடுத்தது என் மோதிரமல்ல என்று அறிந்தே கொடுத்தாள் என்று நேயர்களிற் சிலர் எண்ணலாம். நானும் ஒருகால் அவ்வாறே எண்ணியிருக்கலாம். ஆனால், தனக்கிருந்த மனக்குழப்பத்தில் தன் மோதிரத்தை என் மோதிரமென்று தவறுகக் கழற்றிக் கொடுத்து விட்டாள் என்பதுதான் உண்மை.

"அந்தத் தவறை அறிந்தாள் சாவித்திரி. உடனே, "இல்லை — அது என் மோதிரம், இதோ இருக்கிறது உங்களுடைய மோதிரம்" என்று தன் கையிலிருந்த என் மோதிரத்தைக் கழற்றி மீண்டும் எனக்குக் கொடுக்கலாயினள்.

"இல்லை சாவித்திரி! நீ அதையே வைத்துக்கொள். இது எனக்கிருக்கட்டும்" என்று சற்றுப் புன்னகையுடன் கூறிவிட்டேன். அவள் முகம் ஒரு முறுவலூற்றது. அவ்வாறே அவள் மீண்டும் ந. ஜ – மோதிரத்தை அணிந்துகொண்டாள். அவள் கபடற்ற பெண். இதைப் பதினுயிரம்முறை உறுதியாகக் கூறுவேன். ஆனல் நானும் அவ்வாறே கபடற்றவனு? ஐயோ! அதைமாத்திரம் அவ்வளவு தீர்க்கமாகச் சொல்ல முடியவில்லையே.

சாவித்திரியின் மோதிரம் என் விரலிலிருந்ததைப் பார்க்க, என் மோதிரம் சாவித்திரி அணிந்திருந்ததைப்பார்க்க, என்னுள் எழுந்த உவகையே உவகை! அந்த உவகையில், "என் மோதிரம் அவளுக்கு எப்படிக் கிடைத்தது?" என்று விசாரிக்கக்கூட மறந்துவிட்டேன். அந்த உவகையில், எனக்குச் சற்று முன்பிருந்த மனக்குழப்பமும் நீங்கிற்று. "உட்கார் சாவித்திரி! நீ நிற்பது எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. நம்மிருவருக்கும் உபசார வார்த்தைகள் ஏற்பாடுகள் ஏன்! நாம் பழைய நாட்களில் இருந்ததுபோலப் பழகியிருப்போம்" என்றேன். உடனே சாவித்திரியும் நாற்காலியில் உட்கார்ந்துவிட்டாள். நான் அவளைப் பார்த்து இரண்டு மூன்று வருடங்களாயின. அப்பொழுது அவள் அசாதாரண அழகுவாய்ந்த ஒரு மண்ணுலகத்துப் பெண்ணுகத் தோன்றினள். இப்பொழுதோ ஒரு தேவலோகத்து யுவதியாக என் கண் முன்பு மின்னினள். "இவளா சாவித்திரி!" என்று அவளைப் பார்த்துப் பார்த்து அதிசயித்தேன்.

ஐந்தாறு நிமிஷங்களில், நாங்கள் பழைய நாட்களில் இருந்தது போல நெருங்கிய மித்திரர்களாயினோம். யாதொரு மனக்குழப்பமின்றி, சங்கோசமின்றிப் பேசலாயினோம். நாங்கள் பிரிந்தது முதல், இருவரும் பட்ட கஷ்டங்களையெல்லாம் ஒருவருக்கொருவர் அறிவித்துக் கொண்டோம். வறுமை, கடன், குடும்பக் குழப்பங்கள் முதலிய என் துன்பங்கள் நேயர்களுக்குத் தெரியுமே. ஆகையால், சாவித்திரிக்கு நேர்ந்த சகிக்கவொண்ணாப் பெருந் துன்பங்களைப்பற்றி அவள் கூறத் தொடங்கியபின் எங்களிருவருக்கும் நிகழ்ந்த சம்பாஷணையை மாத்திரம் எழுதுகிறேன். —

ஆசிரியனுரை :— சாவித்திரியின் மாமன் இரத்தினசாமி, அவன் மனைவி, மகள், ஆகிய மூவராலும் சாவித்திரிக்குற்ற பலபல அல்லல்களைப்பற்றிய சம்பாஷணையை இவ்விடத்தில் மிகப் பெருக்கமாக எழுதியிருக்கின்றான் நமது கதாநாயகன். அப்பெருக்கப் பேச்சை இப்பொழுது பிரசுரியாது, அவைகளில் சில முக்கிய விஷயங்களை மாத்திரம் ஒருவாறு தொகுத்துச் சொல்லுகிறோம் :— அதிகாலையில் வாசலுக்குச் சாணந்தெளித்தல், பாத்திரங்களெல்லாந் துலக்கல், வீடெல்லாம் பெருக்கல் கழுவல் மெழுகல், வீட்டுக் கிணற்றில் தண்ணீர் மொள்ளல், வீட்டிலுள்ளார் துணிமணிகளைத் துவைத்துச் சுத்தம் செய்தல், சமையல் செய்தல் முதலிய வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் சாவித்திரியே வகித்து, ஒரு பணிப்பெண்ணினுங் கேவலமாகத் தன் மாமன் குடும்பத்திற்கு உழைக்கவேண்டியிருந்தது. சாவித்திரியின் சொந்த வயலில் விளைந்துவரும் நெல்லில், வீட்டு உபயோகத்திற்கு வேண்டிய அளவு வைத்துக்கொண்டு எஞ்சிய பெரும்பாகத்தை இரத்தினசாமி விற்றுவிடுவது வழக்கம். வீட்டு உபயோகத்திற்கான நெல்லைக் குற்றி அரிசியாக்கவேண்டிய வேலை சாவித்திரிக்கே விதிக்கப்பட்டிருந்தது.* சிறிது காலத்திற்குப் பிறகு, நெல்லாக விற்பதைவிட அரிசியாக விற்றால் அதிக இலாபம் பெறலாமென்று இரத்தினசாமியின் மனைவி சொல்லவே கழனியிலிருந்து வரும் நெல் அனைத்தையும் ஒரே ஒரு கூலிப் பெண்ணின் உதவியோடு சாவித்திரியே அரிசியாக்கவேண்டியதாய் விட்டது. தன் தாய் தந்தையர் காலத்து, செல்வப் புதல்வியாக வளர்ந்த சாவித்திரிக்கு ஓயாத வேலை. ஆகையால் சிரமம் எவ்வளவு இருக்கவேண்டுமென்று நீங்களே அறிந்துகொள்ளலாம். ஆனால் சாவித்திரி அந்தக் கடுஞ் சிரமத்தையும் அதிகமாகப் பாராட்டாமல் பொறுமையே பூஷணமாகக்கொண்டு உழைத்தாள். கணவனையிழந்த காரிகை, முக்கியமாய்ப் பாலியக் கைம்பெண், தான் பொற்றாலிகட்டிப் புகுந்தறுத்த வீடு, தன்

சகோதரன் வீடு, சகோதரி வீடு முதலியவைகளில் எந்த வீட்டிலேனும்
அடங்கி வசித்து அவர்கள் காலாலிட்ட வேலைகளையெல்லாம் தலையாற்
செய்துகொண்டு, தன் சாண் வயிற்றை வளர்க்கவேண்டியதைவிட அவ
ளுக்கு வேறு வாழ்வு என்ன இருக்கிறது — என்று, தமிழ்நாட்டில்
சாந்தம், சற்குணம், கண்ணோட்டம் முதலிய நலங்கள் தங்கப்பெற்ற
சற்புருஷர்களே நன் மங்கையர்களே கருதுகிறார்கள். அப்படி ஒரு
கால் அவர்கள் மனப்பூர்வமாகக் கருதாவிட்டாலும் தங்கள் வீட்டில்,
தங்கள் தங்கை, தமக்கை, தாய், புத்திரி, அத்தை என்றவாறு உறவு
பூண்ட விதவை முற்கூறியவாறு வயிறுவளர்ப்பதைக் கண்ணுற்பார்த்துக்
கொண்டும் வருகிறார்கள். ஆகையால், கயமை, பணவெறி, இரக்க
மின்மை முதலியன கொண்ட இரத்தினசாமியும் அவன் மனைவியும்
வீட்டுப் பணிகளெல்லாவற்றையும் சாவித்திரியின் தலையில் வீழ்த்தியது
ஒரு வியப்பன்று. ஆனால் இதனால் சாவித்திரி மனத்தாங்க லடைய
வில்லை. இரவிக்கை தரிக்கக்கூடாது, சுத்தமான உடை உடுத்தக்கூடாது,
புத்தகத்தைத் தொடக்கூடாது, வீணையைப் பார்க்கவேகூடாது, கூந்
லைச் சீவிக் கட்டிக்கொள்ளக்கூடாது, தினந்தோறும் நீராடக்கூடாது,
அதிகாலையில் சாணந் தெளிப்பதற்குத் தவிர வீட்டு முற்புறத்திற்கு வரக்
கூடாது, அப்படிக்கூடாது, இப்படிக்கூடாது என்று என்னென்னவோ
கூடாது சட்டங்களால், அவள் அத்தையும் மாமனும் அவளைக் கட்டுப்
படுத்தி யிருந்ததுமன்றி, அவள் கைம்பெண்ணா யிருப்பதுபற்றி ஆயிரத்
தெட்டு விதங்களாக வருணிக்கப்பெற்ற பல வன்சொற்களையும் வேறு
பல வன்சொற்களையும், சந்ததமும் சலியாமல் இறைத்துக்கொண்டிருந்
தார்கள் அக் கொடியவர்கள். இந்த நிர்ப்பந்தங்களையும் ஆசிகளையுந்தான்
சாவித்திரியால் சகிக்கக்கூடவில்லை. ஆகையால் சில சமயங்களில் ஆத்
திரமும் ரோஷமும் பொங்க, அவர்களை எதிர்த்துச் சில வார்த்தைகள்
கூறினாள். அதனால் வீட்டில் இரைச்சலும் அவர்கள் கொடுமைகளும்
அதிகரித்ததன்றி, சாவித்திரி அடியும்பட நேர்ந்தது. என்செய்வாள்
சாவித்திரி! அவள் தந்தை, தான் தேடிய திரவியம், ஆஸ்தி எல்லாவற்
றையும் அவளுக்கே ஏக உரிமையாக்கிச் சட்டப்படி பத்திரமெழுதிப்
பதிவு செய்துவைத்திருந்தபோதிலும், அவள் மாமன் அவளுக்கேயுரிய
ஆஸ்திகள் வருமானங்கள் யாவற்றையும் தான் அநுபவித்துக்கொண்டு
அவளை முற்கூறியவாறு சம்ரக்ஷிக்கிறான். என் செய்வாள் சாவித்திரி!
இந்த அநியாயங்களை யாரிடத்தில் முறையிடுவாள். நியாயஸ்தலமிருக்
கிறது. மெய்தான். ஆனால் அதற்காக அவள் தன் மாமன் வீட்டைவிட்
டகன்று முயற்சித்தால், அரச சட்டப்படி அவள் சொந்த உரிமைகளை

அவள் பெறும்படி தீர்மானிக்கும் நியாயாதிபதிகூட (அவர் ஒரு தமிழரா யிருந்தால்) தன் உள்ளத்தில் அவளை நிந்திக்கக்கூடுமானால், ஏனையோர் நிந்தனையைப்பற்றிக் கேட்பானேன். "குழந்தையாயிருந்தாலும், குமரியா யிருந்தாலும், பேரிளம்பெண்ணாயிருந்தாலும், விருத்தையாயிருந்தாலும், விவாகமில்லாதிருந்தாலும், சுமங்கலியாயிருந்தாலும், அமங்கலியாயிருந் தாலும், பெண்ணாகப் பிறந்தவளுக்குச் சுவாதீனமே கிடையாது. தன் தந்தை, சிறிய தந்தை, கணவன், மாமன், தம்பி, அண்ணன், புத்திரன், பௌத்திரன், பௌத்திரனுடைய புத்திர பௌத்திரர் முதலியவர்களில் எவரேனும் ஒரு ஆண் உறவினருக் கடங்கி அன்னோர் ஆதரவிலும் சம்ரக்ஷணையிலுமே இருக்கவேண்டும்" என்று, ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட மநுநீதியும் அதைச் சார்ந்தெழுந்த வியாக்கியானங்களும் கொள்கைகளும் விதித்திருக்கின்றன. அவ் விதிக் குத் தமிழ்நாட்டார் இன்னும் வைத்துள்ள மதிப்பு எவ்வளவு ஆழ்ந்ததா யிருக்கிறதம்மா! மநுச்சட்டத்துக்கு முன்பும் பின்னரும் பற்பல நாடு களில் பற்பலவித நாகரிகங்களில் ஏற்பட்ட பலப்பல சட்டங்களையும் மநுச்சட்டத்தையும் ஆராய்ந்து பார்த்து ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்துக் குணாகுணங்களை அறிகிறார்களா! அல்லது மநுநீதிசாத்திரம் ஒன்றையாவது முழுதும் கண்டிப்பாக அநுசரிக்கிறார்களா! ஐயோ! இல்லையே! பெண்கள் படும்பாட்டிற்கு மாத்திரந்தான் மநுச்சட்டவிதி. அது நமது பெண்களின் தலைவிதி. அவர்களுக்கு ஏற்பட்ட சாபம். இந்தத் தலைவிதியும் சாபமும் எப்பொழுது தொலையுமோ அப்பொழுது தான் தமிழ் நாடு உண்மையில் உயிரும் ஒளியும் உயர்வும் உறும்.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

தொண்டைமண்டல சதகம்.

நின்றை காளத்திவாணர்.

"தாயினு நல்ல தயையுடை யோர்க டமதுடலம்
வீயினுஞ் செய்கை விடுவர்கொல் லோதங்கண் மெய்ம்முழுதுந்
தீயினும் வீழ்வர் முதுகினுஞ் சோறிட்டுச் சீறாவின்
வாயினுங் கையிடு வாரவர் காண்டொண்டை மண்டலமே."

பொழிப்புரை.

வேளாண்மரபினர், குழந்தைகளிடத்துக் குறைவிலாத அன்புடைய நற்றாயினும் பிறவுயிர்களிடத்து அன்புசெய்தலின் மிக நல்லோர். ஆதலின், தங்களுடம்பிற்கு அழிவு நேரிட்டாலும், தமது நற்செய்கையாகிய நோன்பைக் கைவிடார். எங்ஙனமெனில், வேளாளருள் எழுபது பேர் ஒரு செட்டியின் உயிர்க்காகத் தீயில்வீழ்ந்திறந்து பழிகொடுத்தனர். ஒருவர், தம் வீட்டில் விருந்தாய்வந்த புலவரொருவர்க்குப் பூரண கர்ப்பிணியாகிய தமது மனைவி முதுகில், அன்னமிட் டுண்பித்தார். மற்றொருவர், பாம்பின் வாயிற் கையிட்டு மாணிக்கமெடுத்து, வந்த புலவருக்குக் கொடுத்தருளினர். இத்தகைய வேளாளருக்கு உறைவிடமாயுள்ளது தொண்டைமண்டலம்.

வரலாறு.

மேற்குறித்த சதகச் செய்யுள், முதல் இரண்டடிகளில் 8-வது செய்யுளில் விவரித்த நீலி பழியைத் தவிர்த்த வரலாறும், மூன்றாமடியில் 10-வது செய்யுளில், கூறிய மனைவிமுதுகில் சுடுசோறிட்ட வரலாறும், நான்காமடியில் கீழ்விவகரிக்கப்படும் காளத்திவாணன் வரலாறும் காணப்படுகின்றன. இந்நான்காமடியில் காட்டிய "சீறரவின்வாயினுங் கையிடுவார்" எனக் காணும். ஒரு சிறு குறிப்பைக்கொண்டு இச் செய்கைக்குரியவன் "நின்றை காளத்திவாணன்" எனத் தெரிவதால் அவ் வள்ளலின் வரலாற்றை ஒருவாறு அடியில் வருமாறு கூறுவாம்:—

"நின்றையர்கோன்," "காளத்திவாணன்" என வருவதுகொண்டு இவர் ஓர் சிற்றரசனு யிருக்கவேண்டுமென யூகிக்க விடந்தருகிறது. "கோன்" "வாணன்" என்ற பதங்கள் அரசன் என்னும் பொருளைத் தருவன. இவர் இயற்பெயர் காளத்தி. வேளாண்மரபில் வந்ததுபற்றி, "காளத்திமுதலியார்" என வழங்கினர். இவர் பெருந்தியாகியும், வள்ளலுமாய், "பூசலார்நாயனர்" அவதரித்ததும், சென்னைக்கும், திருவள்ளூருக்கும் இடையில், தற்காலம் "தின்னனூர்" என்னும் பெயருடன் ரயில்வேஸ்டேஷனுசவுள்ளதுமாகிய திருநின்றையூரில் சிறப்பாக வாழ்ந்தவர். கவிவாணர்க்குப் பெருநிதியாய் விளங்கியதால் வண்டுமலர்ச் சேக்கை விரும்புந் தன்மைபோல் பாவாணர் பலர் இவர்மேற் பாட்டிசைத்துப் பணம் பெற்றுச் செல்வர். இதனு லிவர் பெரும்புகழ். வான்நதியின் பெருக்கெனப் பரந்தது. இவர் வாழ்ந்த நாட்டுக்குரிய அரசன் உலோபகுணமுடையனுதல்பற்றி, இவர் புகழ்கேட்கச் சகியானுகி, இவர் பெரும்பொருளையெல்லாம் கவர்ந்து வறுமையடையுமாறு செய்தனன்.

இவ் வரசன் இக் குணமுடையானென்பது ஓர் புலவர் பாடியுள்ள செய்யுளால் தெரிகிறது. அப் பாடல் வருமாறு :—

"நின்றை நின்ற நீடிசை வள்ளால்!
உவர்க்கட லன்ன செல்வ னாட்டில்
நீர்க்கேணி யன்ன நீயுளை வியப்பே!
கார்க்கடல் கழிதழூஉம் புலவினுண்டோர்
ஓர்க்கோலை நாற லுண்மை யன்றே." *

இவ்வாறு வறுமையடையப்பட்ட வள்ளல், தமக்கு இக் கதி நேர்ந்ததற்கு வருந்தாது, கவிபாடிப் பரிசுபெறவரும் புலவர்க்கு, நாம் இனி என் பதில் சொல்வது? இரப்போர்க்கு இல்லையென்று சொல்வதைப்பார்க்கிலும் இறந்துவிடுதல் மேலெனக் கருதி அவ்வூரைவிட்டகன்று அடுத்துள்ள ஓர் சிற்றூரிற் சென்று பிரயாணிகள் தங்கும் ஓர் சத்திரத்தில் தனியிடத்தில் தங்கித் தம்முடைய கதியை அவ்வாறாக்கின விதியை வெறுத்து ஏங்கி உறங்காமலிருந்தனர். இவர் இறங்கிய சத்திரத்தே † ஓர் புலவன், இவர்பால் தியாகம் பெறும்பொருட்டாக, தன்னை விடாது பற்றித் தொடர்ந்து வருத்திக்கொண்டிருக்கிற வறுமையை முன்னிலைப் படுத்தி,

"நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழற்போலு
நாளைக் கிருத்தியோ நல்குரவே — காளத்தி
நின்றைக்கே சென்றக்கா னீயெங்கே நானெங்கே
யின்றைக்கே யென்பா விரு."

என்று பாடினன்.

இக் கருத்தையே இச் சதகத்தின் 32-வது செய்யுளில்,

---

* இதன்பொருள் — திருநின்றவூரில் வசிக்கின்ற மகத்தான கீர்த்தியையுடைய வரையாது கொடுக்கும் பிரபுவே! கடல்நீரையொத்த செல்வப் பெருக்குடைய வேந்தனுக் குட்பட்டிருக்கும் இந்த நாட்டில், ஊறுநீர்போல் நீ விளங்குகின்றனை. இது ஆச்சரியமேயாகும். கரிய நிறத்தையுடைய கடலை அடுத்த கழிகளிலுண்டாகும் புலால் நாற்றத்தின் மத்தியில் ஓர்க்கோலையென்னும் ஓர் வாசனைப்பொருளும் நறுமணம் வீசுதல் உண்மையே ஆகுமல்லவா? என்பதாம்.

† இப் புலவர் — மதுரகவிராயரென்று தனிப்பாடற்றிரட்டும், தனிச்செய்யுட் சிந்தாமணியும் கூறுகிறது.

‡ "நீளத் திரிந்தென்று வெண்பாவி னாலன்று நின்றையர்கோன்
காளத்தி வாணனைப் பாடிய பாடல் கருதுமண்ட
கோளத்தி னுஞ்சென்று பாதாளம் புக்குக் குலவுசக்ர
வாளத்தி னுஞ்சென்ற தாலெளி தோதொண்டை மண்டலமே."

எனக் குறித்ததாகும்.

இச் செய்யுளைக்கேட்ட வள்ளல் சகியாராகி, தம்மை நாடி வெகு தூரத்தினின்றும் மிக்க ஆசையோடுவந்த புலவன் தம்மைக் காணா விடத்து எங்ஙனம் வருந்துவானோவென்று தாம் வருந்தி, அப் புலவனுக்கு ஆசாபங்கம் உண்டாகாமல் எங்ஙனமேனும் ஆதரிக்கவேண்டுமென்னும் எண்ணமுடையாராய் விடியுமுன் னெழுந்து மீண்டும் தம்மூரடைந்து மனையிலிருந்தனர். கவிஞரும் காலையிற் சென்று பிரபுவைக் கண்டு புலவர்கள் தம் பதிவுப்படி முன்னம் கற்பகத்தருவே! காமதேனுவே! பொன்மழையே! என்று பலவாறு பாட்டாலும், உரையாலும் புகழ்ந்து பின், "நீளத்திரிந்துழன்றாய்" என்ற பாடலையும் பாடினர். வாணர்க்கு இல்லையென்று சொல்லவும் நாவெழாமல், உண்டென்று கொடுக்கவும் கையெழாமல் நெஞ்சம் வருந்தியது. உலோபிகளுக்கு எப்படிக் கொடுத்தல் வருத்தமோ, அதிலும் எண்மடங்கு வருத்தம் உதார குணமுள்ளவர்களுக்கு இல்லையென்று கூறி மறுத்தல். ஆதலினாலே, பிரபு இல்லையென்று சொல்லுதலினும் உயிர்விடுதலே நலமென்று துணிந்து புலவரை நோக்கி, "சற்றே பொறும் வருகிறேன்" என்று கூறி விட்டுக் கொல்லைப்புறஞ் சென்று தமது தோட்டத்திலுள்ள ஒரு ¶ பெரும்புற்றினுள்ளே தமது கையை நீட்டினர். அதனுள் பதுங்கியிருந்த நாகசர்ப்பமொன்று சீறிச் சினந்ததெனினும், யாசகர்க்கு மேகம்போலக் கைம்மாறு கருதாது ஈந்து சிவந்த திருக்கரமென்ற வுணர்வுதோன்ற, கோபந் தணிந்து தனது முடியிலுள்ள நாகரத்தின மொன்றை அவர்

---

‡ இதன் பொழிப்புரை—திருநின்றையூர்க் காளத்திவாணமுதலியார் புலவோரை வறுமையென்னும் கொடும்பகை வருத்தாமல், ஆதரஞ் செய்து புகழ்பெற்றவராதலின், அப் புகழ்தோன்ற ஒரு புலவர், "நீளத் திரிந்துழன்றாய்" என முதலமையப் பாடிய வெண்பாப் பாடல் அண்ட முகட்டினுஞ் சென்று பாதாளத்திலும் புகுந்து அமையாமல், சக்கரவான கிரியையும் சூழ்ந்துகொண்டது. இத்தகைய பிரபுவையுடைய இத் தொண்டைமண்டலம் எளிதாமோ.

¶ "துளையிட்ட முள்ளெயிற் றரவின்வாய் முழையிற்
றுறுத்திட்ட வநசத்தினால்" (மேற்கோள்)

கையிற் கக்கியது. அதுகண்டவளவில் பெரிதும் மகிழ்ந்து புலவரை உபசரித்து நல்லுரை புகன்று, அதனை அவர்க்குக் கொடுத்து வழி விடுத்தனர்.

பரிசுபெற்ற புலவர், அதனை அவ்வூர் அரசனிடத்துக் காட்டி அதற்குரிய பொருளைத் தரும்படி வேண்ட, அரசன் அதன் அருமை பெருமைகளை யுணர்ந்து அவ்வாறே தந்து, தமது மந்திரியை அழைத்து, இதுபோன்ற இரத்தினங்கள் இன்னும் களத்தியாரிடத்தில் உளதேல் பறித்துவாருங்களென்று அனுப்ப, அமைச்சர் பிரபுவை அடுத்துக் கேட்க, அவர் பாம்பு உதவியது என்றார். மந்திரி அப் பாம்பு ஜீவரத்தினத்தையும் நீர்கேட்டுக்கொடுப்பதைக் கண்டாலன்றி எமக்குச் சந்தேகம் நிவர்த்தியாகாதென்றனர். பிரபு அங்ஙனமேயென்று அமைச்சருடன் அப் புற்றையடுத்து, முன்கொண்ட கருத்துடன் மரணத்திற்குத் துணிந்து முன்போலவே அதனுள் கையிட்டமாத்திரத்தில், சர்ப்பம் சீறியெழுந்து நீண்ட வந்து, வள்ளலின் திருக்கரமென்ப துணர்ந்து தீண்டுதற்கஞ்சி அத் திருக்கரத்தில் தனது ஜீவரத்தினத்தைக் கக்கித் தானும் புறம்போந்து, அமைச்சனும், வாணரும் கண்டதிசயிக்கத் தன் பிராணனை விட்டது. இவ் வதிசயத்தை மந்திரி அரசனுக்குணர்த்த, அரசன் திடுக்கிட்டு வியந்து, தமது அறியாமைக் கிரங்கி, வள்ளலையடுத்து, தாம் செய்த குற்றங்கட்கு மன்னிப்புவேண்டி, வாணரிடம்பறித்த செல்வங்களனைத்து மீட்டும் தந்து, அவரை நன்கு கொண்டாடிப் புகழ்ந்தனன். வள்ளல் முன்னிலும் பல மடங்கு மேன்மையாக வாழ்ந்து சிறந்த தர்மங்களைச் செய்து மேலும் பெரும்புகழ் பெற்று வாழ்ந்தனரென்ப.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

ஐயங்கார்குளம் சைவசித்தாந்தபுராணப் பிரசங்க சபையின் முதல் வருடோற்சவம்.

காஞ்சீபுரத்தைச்சார்ந்த ஐயங்கார்குளம் சைவசித்தாந்த புராணப் பிரசங்க சபையின் முதல் வருடோற்சவமானது, அறிக்கைப் பத்திரத்திற் கண்டபடி நாளது அநல ௵ மாசி ௴ ௬ – ௭ ௳ (17 – 18 – 2 – 17) சனி, ஞாயிறு இத்தினங்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள் காலை 11 மணிக்கு அறுசுவைப் போனக மமர்ந்துண்டு அடைக்கா யருந்திய பின், சுமார் 1 மணிக்கு அக்ராசனர் ஆகிய சென்னை அஷ்டாவதானம், சித்தாந்தசரபம் சிவஸ்ரீ கலியாணசுந்தர

யதீந்திரர் அவர்களை, குடை, கொடி முதலிய விருதுகளுடன் வாத்தியங்களோடு சபாமண்டபத்திற் கழைத்துச் சென்றவுடன் தேவார பாராயணஞ் செய்யப்பட்டது. உடனே காஞ்சிபுரம் ஸ்ரீமான் பி. செ. முருகேச முதலியார் அவர்களால் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு சபைத்தலைவர் ஸ்ரீமான் நா. ஒதியப்ப முதலியார் அவர்கள் அறிக்கைப் பத்திரம் வாசித்த பின்னர், அக்ராசனர் அவர்கள் தமது ஆரம்பப் பிரசங்கத்தை மிக இனிமையாகச் செய்தனர். பின்னர், காஞ்சிபுரம் ஸ்ரீமான் சோணாசல பாரதி அவர்கள் "திருமுறைப் பிரபாவம்" என்னும் விடயத்தைக் கடன்மடை திறந்தாலென்னக் கேட்டவர் மகிழ வுபன்னியசித்தனர். பின்னர், சென்னை ஸ்ரீமான் மணி - திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் "சைவசித்தாந்தம்" என்னும் விடயத்தை மிக மேலான செந்தமிழ் நடையில் மேலான சாஸ்திரக் கருத்துக்களால் மிக விளக்கமாக வுபன்னியசித்தனர். அதன் பிறகு, செங்கல்பட்டு ஸ்ரீமான் போன்மார் - நடேச முதலியார் அவர்கள் "அடியார் பெருமை" என்பதைப் பீடிகையாகக்கொண்டு அநேக சரித்திர மேற்கோள்களுடன் சிவனடியார் பெருமைகளை விளக்கினர். பின்னர்ச் சிற்றுண்டி நுகர்வதற்காகச் சிறிதுநேரம் கலைந்து மறுபடியும் சபை கூடியவுடன், காவித்தண்டலம், ஸ்ரீமான் வேதாசல முதலியார் அவர்கள், "அருளாட்சி" என்னும் விடயத்தை எடுத்துக்கொண்டு ஒவ்வொருவருக்கும் ஜீவகாருண்யம் அவசியமென்பதைப் பாமரர் மனதிலும் பதியும்படி யுரைத்தார். கடைசியில் அக்ராசனருடைய அபிப்பிராயங் கூறப்பட்டு, இரவு 8 மணி சுமாருக்குச் சபை கலைந்தது.

இரண்டாவது நாள்.

(18 - 2 - 17) ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்குப் பற்பல பக்ஷணங்களோடு கூடிய ஷட்ரசான்ன முண்டபின் சுமார் 12½ மணிக்குச் சபை கூடியது. பன்னிரு திருமுறைப் பாராயணஞ் செய்தவுடன், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம், தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபை, கோயமுத்தூர்ச் சாரதாவிலாச சபை முதலிய இடங்களிலிருந்து வந்த கடிதங்கள் ஸ்ரீமான் பி. செ. முருகேச முதலியார் அவர்களால் வாசிக்கப்பட்டன. பின்னர், புலிசை ஸ்ரீமத் ஞானியார் மாணவர் கழகம் ஸ்ரீமான் பாலசுந்தர நாயகர் அவர்கள் "நல்லறம்" என்னும் விடயத்தைப் பல பிரபல சுருதிகளை மேற்கோளாகக்கொண்டு மிக்க இனிமைதோன்ற உபன்னியசித்தனர். அதன்பின், புலிசை ஸ்ரீமத் ஞானியார் மாணவர்கழகம் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளை அவர்

கள் "நம் முயற்சி" என்னும் விடயத்தைப் பீடிகையாகக்கொண்டு, தற்காலம் நம் தமிழ் மக்கள் இருக்கின்ற நிலையையும் திருந்தவேண்டிய மாதிரிகளையும் எடுத்துக் கூறினர். பிறகு, சென்னைச் சிவாகசியப் பதிப்பாசிரியர் ஸ்ரீமான் க. சதாசிவ செட்டியார் B. A. அவர்கள் "சிவாகமம்" என்னும் விடயத்தை எடுத்துக்கொண்டு நமது வேதாகமங்களிலுள்ள அரும்பெரும் விடயங்களையெல்லாம் சோனாமாரியாக வருஷித்தனர். உடனே சிற்றுண்டிக்காகச் சிறிதுநேரம் சபை கலைந்து மற்றபடி அரைமணி நேரத்திற்கெல்லாம் கூடியவுடன், சென்னை ஸ்ரீமான் நா. கந்தசாமி முதலியார் B. A. அவர்கள் "திருவாசகம்" என்னும் விடயமாக உபந்நியசிக்கத் தொடங்கி, திருவாசகத்தில் புதைந்து கிடக்கும் அரிய பெரிய விடயங்களையெல்லாம் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதிற் காட்டினர். பின்னர், ஐயங்கார்குளம் ஸ்ரீமான் க. பொன்னுசாமி முதலியார் அவர்கள் "அன்பு" என்னும் விடயத்தைச் சிறிதுநேரம் உபந்நியசித்த பிறகு, அக்கிராசனர் தம்முடைய அபிப்பிராயஞ் சொல்லத் தொடங்கி, சுமார் 1 மணி நேரம்போல் சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்களை எல்லாம் இனிது விளக்கியபின், காஞ்சீபுரம் ஸ்ரீமான் பி. செ. முருகேச முதலியார் அவர்களால் கடைசியில் வந்தனோபசாரஞ் சொல்லப்பட்டு இரவு சுமார் 8 மணிக்குமேல் சபை முடிவுபெற்றது. இரண்டு தினங்களும் காஞ்சீபுரத்திலிருந்தும் ஏனைய கிராமங்களிலிருந்தும் அநேக சைவாபிமானிகள் வந்து சபையை அலங்கரித்தனர். இச்சபையும், இதுபோன்ற பற்பல சைவ சபைகளும் மேன்மேலும் அபிவிருத்தி யடையவேண்டுமென்றும், இனியும் கிராமங்கள்தோறும் பற்பல சைவ சபைகள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் எல்லாம் வல்ல பரம கருணாநிதியை யிறைஞ்சுகின்றோம்.

சைவ சமயாபிமானி.

ஓர் சந்தேக வினா.

தேலுங்கு பாஷையானது
திராவிடமா? ஆரியமா?

இதனைப் பிரமாணத்துடன் விளக்கக் கோருகின்றேன்.

உண்மை விரும்பி.

ஓர் வேண்டுகோள்.

திருவானைக்காப்புராணம், கவுதமப்படலம்,

உக-வது செய்யுள் :—

மண்வி ராம்புனல் விராவழன் மானமேல் கடற்யால்
விண்வி ராவொளி விராவிருள் விளங்கழல் விராவு
மெண்வி ராவுகால் பொரவிதின் விராவுவான் குறியிற்
றண்வி ராவிய தவளமா மதியெழுந் தன்றே.

பிரபுலிங்கலீலை,

முனிவரர்கதி, களு-வது செய்யுள் :—

ஞானங் கொண்டு நணுகுஞ் சிவபத
மூனங் கொண்ட கருமத் துறுவது
வானங் கொண்டு வளர்த்தல் புகையது
மானங் கொண்டு வளர்த்தலை யொக்குமால்.

என்னுமிச் செய்யு ளிரண்டின் பொருள் விளக்கஞ்செய்யும்படி செந்தமிழ்ப் புலவர் சிகாமணிகளது திருவுறு திவ்ய சமுகத்தில் விண்ணப்பித்துக்கொள்கின்றேன்.

வித்தை விரும்பி.

பாகூர் ஸ்ரீ கோபாலவாசகசாலையின் மூன்றுவது ஆண்டுவிழாக் கொண்டாட்டம்.

மேற்படி விழாக் கொண்டாட்டமானது, பாகூர் கவர்ன்மெண்ட் கல்விச்சாலையில், நிகழும் அநல ஞு தை மீ 30-ம் உ (11 – 2 – 1917) ஞாயிற்றுக்கிழமை காலை முதல் இரவு 8½ மணிவரையில், சென்னை மாதர் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும், நல்லாசிரியன் பத்திராதிபரும் ஆகிய ஸ்ரீமான் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

(11 – 2 – 1917) ஞாயிற்றுக்கிழமை காலை 8½ மணிக்கு ஷை சபையார்களும் அன்பர்களும் சென்று அக்கிராசனர் அவர்களை கவர்ன்மெண்ட் பெண் பாடசாலையினின்று மிக்க விபவத்தோடு அழைத்து வந்தார்கள். பின்பு 8½ மணிக்குச் சபை கூடிற்று.

சபாநாயகர் அவர்கள் அக்கிராசனம் வகித்தருளினதும், கடவுள் வாழ்த்து நடைபெற்றது. உடனே வந்தனோபசார பத்திரம் படித்துக்

கொடுக்கப்பட்டதும், சபாநாயகர் அவர்கள் முன்னுரை மிக விஸ்தாரமாகக் கூறினார்கள். பின்னர், புதுவை சிப் செக்ரெடெரி ஆபீஸ், ஸ்ரீமான் A. V. முத்தைய முதலியார் அவர்கள் "வாசகசாலையும், அதன் பயனும்" என்பதுபற்றியும், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மாணவர் கழகம் ஸ்ரீமான் பாலசுந்தரநாயனார் அவர்கள் "இணக்கம்" என்பதுபற்றியும், பாகூர் ஸ்ரீ கோபாலவாசகசாலையின் காரியதரிசி ஆதிங்கப்பட்டு, ஸ்ரீமான் ஆ. வீ. நாராயண ரெட்டியார் அவர்கள் "பெண் கல்வி அவசியம்" என்பதுபற்றியும் உபன்னியசித்தார்கள். உடனே ஷை காரியதரிசியார் சபையின் பிரதிநிதியாக எழுந்து தற்காலம் ஐரோப்பாவில் நடைபெறுகின்ற மகா கோரமான யுத்தத்தில் நமது பிரான்சு தேச இராஜாங்கத்தாருக்கும், இங்கிலீஷ் முதலிய நேசவல்லரசுகளுக்கும் கொடிய பகைவர்களால் ஏற்பட்டுள்ள கஷ்டத்தைப்பற்றிப் பெரிதும் வருந்துகின்றோமென்றும், இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர்கள் குடிகளாயுள்ள நாம் ஒவ்வொருவரும் உடலினாலோ, பொருளினாலோ, உயிரினாலோ, அவர்களுக்கு உதவிசெய்யக் கடமைப்பட்டுள்ளோமென்றும், அப்படி உதவிசெய்ய நமக்குச் சக்தியில்லையாதலின் நமது இராஜாங்கத்தாரும், நேசவல்லரசுகளும் கூடிய விரைவில் சத்துருக்களை அழித்து ஜெயம்பெறுமாறு எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வழிபடுகின்றோமென்றும், மாட்சிமைதங்கிய நமது குடியரசுத்தலைவராகிய "M. புவேன்கர்ரே" அவர்களுக்கும், மாட்சிமைதங்கிய "ஐந்தாம் ஜார்ஜ்" சக்கரவர்த்தி அவர்களுக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோமென்றும் பேசி யமர்ந்தார். பின்னர், சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் M. S. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், "தமிழ்" என்பதுபற்றி உபன்னியசித்து முடிந்ததும் சபாநாயகர் அவர்கள் மிக இனிமையாகப் பின்னுரை கூறினார்கள். தேவாரபாராயணத்துடன் பகல் ஒரு மணிக்குச் சபை கலைந்தது.

அன்று மாலை 4 மணிக்குச் சபைகூட, "தமிழ்" என்னும் உபன்னியாசத்தைப் பின்பற்றிச் சபாநாயகர் மிக விஸ்தாரமாகப் பிரசங்கித்தார்கள். பிறகு, புலிசை ஸ்ரீமத் ஞானியார் மாணவர் கழகம் காரியதரிசி மணம்பூண்டி ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப் பிள்ளை அவர்கள் "ஒற்றுமை" என்பதுபற்றியும், புதுவைக் கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதரும், கலைமகள் பத்திராதிபருமாகிய ஸ்ரீமான் சி. பங்காரு பத்தர் அவர்கள் "பரோபகாரம்" என்பதுபற்றியும் உபன்னியசித்தார்கள்.

பின்னர், சபாநாயகர் அவர்கள் மிக அழகாக முடிவுரைப் பிரசங்கம் செய்து யாவரையும் களிப்பில் ஆழ்த்தினார்கள். ஷை வாசகசாலைத் தலைவர்

ஸ்ரீமான் அரங்கசாமி நாயடு அவர்களால் அக்கிராசனாதிபதி யவர்களுக்கும் உபன்னியாசகர்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்றியறிந்த வந்தனம் கூறப்பட்டது. அங்கு வந்திருந்தவர்கள் எல்லோருக்கும் சந்தனம், புஷ்பம், தாம்பூலம் வழங்கப்பட்டன. இரவு 8½ மணிக்குச் சபை பூர்த்தியடைந்தது.

இவ்வாறே நமது பாகூர் ஸ்ரீ கோபாலவாசகசாலை மேலுமேலும் விருத்திக்கு வருமாறு திருவருள்செய்ய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ஆதிங்கப்பட்டு, A. V. நாராயண ரெட்டி,

ஷை வாசகசாலையின் காரியதரிசி.

நியாயமாலா.

2-வது சதகம்.

(வெண்டாமரை ௩, இதழ் ௧, 23-ம் பக்கத் தொடர்ச்சி.)

6. உபவாசாத் வரம் பைக்ஷ நியாயம் :— உபவாசாத் = பட்டினியா யிருப்பதினும், பைக்ஷம் = இரந்துண்பது, வரம் = மேன்மை, நியாயம் = திருஷ்டாந்தம்.

இது சிறந்த சாதனங்கொண்டு பயன்பெறலேலாதவிடத்து, இழிந்த சாதனங்கொண்டு அப்பலனைப்பெறல் மேன்மையாதலிதுபோல வென்கின்றது. அதாவது: உழவு, வாணிபம் முதலிய சிறந்த முயற்சியால்தேடிய பொருளைக்கொண்டு பசி தீர்த்துக்கொள்ள முடியாதபோது, இரந்து உண்டு பசி தீர்த்துக்கொள்ளுதல் மேன்மையாதல்போல வென்கின்றது.

7. பிரதான மல்ல ஜய நியாயம் :—பிரதானமல்ல ஜயம்=எல்லா மல்லரினும் முதன்மையான மல்லனை ஜயித்தல், நியாயம் = திருஷ்டாந்தம்.

இது எல்லா விஷயங்களிலும் பலவானான ஸ்திரீ ரூப விஷயத்தின்கண் சுகத்தன்மையின் கண்டனம் செய்யப்படின், சர்வ விஷயங்களின் கண்ணும் சுக ரூபத் தன்மையின் கண்டனஞ் செய்யப்பட்டதாதலிதுபோலவென்கின்றது. அதாவது: எல்லா மல்லரினும் பிரதானமான மல்லன் ஜெயிக்கப்படின், அவன் கீழ்ப்பட்ட எல்லா மல்லரும் ஜெயிக்கப்பட்டவராதல்போல வென்கின்றது.

8. மல்லக் கிராம நியாயம்:— மல்லக் கிராமம் = மல்லர்கள் வசிக்கும் சிற்றூர், நியாயம் = திருஷ்டாந்தம்.

இது வேறு வேறான பல வஸ்துக்களிருக்கு மிடமாயினும், அவைகளுள் எந்த வஸ்துவானது அதிகமாயிருக்குமோ அவ்வஸ்துவிற்கே அவ்விடம் உரியதாய் வழங்கப்பட விதுபோலவென்கின்றது. அதாவது: பல ஜனங்கள் வசிக்குமிடமாயினும், மல்லர்க ளதிகமாய் வசிப்பதால் அக் கிராமமானது மல்லக் கிராமமென வழங்கப்படல்போல வென்கின்றது.

(வரும்.)

இதோபதேசி.

புத்தக நன்கொடை.

கோயமுத்தூர் ஸ்ரீமான் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள், 1. ஸ்ரீ சைவபுராணம், 2. திருக்கழுக்குன்ற தலபுராணம், 3. தமிழ் புலவர் வரலாறு, 4. தமிழ் நாவலர் சரிதை, 5. கண்ணப்பன், 6. தசரதராம சதகம், 7. மன்பதை யாற்றுப்படை, 8. முத்தக பஞ்சவிஞ்சதி, 9. பதிற்றுப்பத்தந்தாதி, 10. திருப்போரூர் பட்டிவிநாயகப்பெருமான்மீது அடைக்கலப் பதிகம், 11. திருநீலகண்ட விநாயகர் பதிகம், 12. திரிபதார்த்த சிந்தனைப் படலம், 13. வேணுகோபால சதகம் ஆகிய பதின்மூன்று புத்தகங்கள் நமது கலைமகள் கழகத்திற்கு நன்கொடையாக அளித்தார்கள்.

புதுவை ஸ்ரீமான் மு. சஞ்சீவி ஐயர் அவர்கள், 1. திருப்புன்கூர்ப் புராணம், 2. பெண்ணை நதிப் புராணம், 3. பயறணீச்சுரர் ஸ்தல புராணம் ஆகிய மூன்று புத்தகங்கள் நன்கொடையாகத் தந்தார்கள்.

அன்புகூர்ந்து அரிய புத்தகங்கள் உதவிய இப்பரோபகார சீலர்களுக்கு, புதுவைக் கலைமகள் கழகத்தார் பெரிதும் நன்றி செலுத்துகின்றார்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
கழகத்தின் காரியதரிசி.

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

பக்திரசம் நிறைந்தது.

பிரகலாதன்.

பாகவத புராணத்தில் கூறப்படும் பிரகலாதன் கதையை அறியாத தமிழர் இல்லை. அது நாடகரூபமாக நவரஸாலங்காரங்களுடன் இனிய எளிய தெளிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே இனிய பாடல்கள் அமைந்துள்ளன. கம்பராமாயணம் பாகவதம் முதலிய நூல்களிலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. நாவல் படிக்க விரும்பும் தற்கால ஜனங்களுக்கு நாவல்போலவும் நாடகத்தின் அலங்காரங்களை அறிந்து இன்புற விரும்புவோருக்கு நாடகமாகவும் இது அமைந்துள்ளது. இதன் விலை அணா 8. கேட்லாக் வேண்டியவர் ½ அணா தபால் லேபில் அனுப்பவேண்டும்.

தனபதி.

படிப்பவர் மனத்தைப் பரமானந்தத்தில் ஆழ்த்தும் பலவித கற்பனாலங்காரக் கதை; இதில் தனபதி என்னும் அரசன் தன் வண்ணானை அரசனாக நியமிக்க, அவ் வண்ணான் அப்போதும் தன் புத்திபோகாமல், அரண்மனையை அவலமாக்குவது படிக்கப் படிக்க விடாநகைப்பை விளைவிக்கும்.

இதன் விலை அணா 2. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். தனிப் புத்தகம் வேண்டுவோர் 2½ அணா தபால் லேபில் அனுப்ப வேண்டும்.

அதிக பக்ஷமுள்ள நண்பர்கள் அனைவருக்கும் தெரிவிக்கத் தக்கது:—

நாவல் படிக்கவேண்டுமானால் இப்பேர்க்கொத்த நாவலையல்லவோ படிக்கவேண்டும். அது என்ன நாவல்? நமது ரங்கராஜு அவர்களால் எழுதிய நான்கு நாவல்கள்.

இராஜாம்பாள்	0 — 12 — 0
ஆனந்த கிருஷ்ணன்	0 — 12 — 0
சந்திரகாந்தா	0 — 12 — 0
மோஹனசுந்திரம்	0 — 12 — 0

பி. வி. கன்னன் அண்டு கம்பெனி,

சிந்தாதிரிப்பேட்டை சென்னை.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

ஜீரண சம்பந்தமான தொந்தரவுகளை நீக்கி ஜீரண சக்தியை விருத்திசெய்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

ரத்த சுத்தி ரத்த விருத்திசெய்து தேக பலத்தைக் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மூத்திர சம்பந்தமான பிணிகளை நீக்கி நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்துகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

புத்தி தீக்ஷணியத்தையும் மனோற்சாகத்தையுங் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

சரீர சம்பந்தமான வியாதிகளை யெல்லாம் குணப்படுத்துகின்றன.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூ. 1.

வைத்தியசாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, 96, மவுண்ட்ரோட், மதராஸ்.

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்